## தொழில் நுட்பக் கல்வித்துறை

அனுப்புநர்
ஆணையர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை–600 025

பெறுநர்
முதல்வர்கள்,
அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகள்

<u>கடித எண்.47605/ஐ–1/2023, நாள். 13.12.2023</u>

ஐயா/அம்மையீர்,

பொருள்: அயலகத் தமிழர் தினம் – ஜனவரி 11 மற்றும் 12, 2024 அன்று அயலக தமிழர் தின விழா நடைபெற உள்ளது – முன்னாள் மாணவர்கள் (முக்கிய பிரமுகர்களாக உள்ள) பற்றிய விவரங்களை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

பார்வை: சென்னை–05, சேப்பாக்கம், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகக், கடிதம் ந.க.எண். இ1/ 5600/2023 நாள் 07.12.2023

.....

பார்வையில் காணும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகக், கடிதத்தில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் எதிர்வரும் 2024, ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் தின விழா சிறப்பான முறையில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பெருவிழாவில் கலந்து கொள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ள அழைப்பிதழ் அனுப்பிட ஏதுவாக தங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் பயின்ற முன்னாள் மாணவர்கள் தொடர்பான விவரங்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பொருள் தொடர்பாக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகத்திற்கு விவரங்களை வழங்குவதற்கு ஏதுவாக, தங்களது கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்களில், தற்போது உயர் பதவியிலோ அல்லது தொழில் துறை மற்றும் பிற துறைகளில் முக்கிய பிரமுகர்களாகத் திகழும் மாணவர்களின் விவரங்களை

கீழ்க்கண்ட படிவத்தில் 20.12.2023-க்குள் இவ்வலுவலகத்திற்கு **tamilarvizha.2023@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| மாணவரின் பெயர் மற்றும் படித்த ஆண்டு /பாடப்பிரிவு | தற்போது பணிபுரியும் அலுவலகம்/நிறுவனம்/ பதவியின் பெயர் /வகித்துவரும் நிலை (Status) | தற்போதைய முகவரி/அலைபேசி எண் (Whatsapp No.) | மாணவரைப் பற்றிய குறிப்புரை |
|---|---|---|---|
| | | | |

13/12/23

ஆணையருக்காக

13/12/23

## அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்

**அனுப்புநர்**
திரு. பா. கிருஷ்ணமூர்த்தி, I.O.F.S.,
ஆணையர்,
அயலகத் தமிழர் நலன் மற்றும்
மறுவாழ்வுத்துறை ஆணையரகம்.
சேப்பாக்கம், சென்னை 600 005.

**பெறுநர்**
இயக்குநர்
தொழில் நுட்ப கல்வி இயக்ககம்,
கிண்டி,
சென்னை 600 035.

047605

12 DEC 2023

ந.க.எண். இ1/ 5600 /2023, நாள்–07.12.2023

அய்யா,

பொருள் அயலகத் தமிழர் தினம் – ஜனவரி 11 மற்றும் 12, 2024 அன்று அயலக தமிழர் தின விழா நடைபெற உள்ளது – முன்னாள் மாணவர்கள் பற்றிய விவரங்களை வழங்க கோருதல் – தொடர்பாக.

பார்வை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு நாள் : 06.10.2021

*****

பார்வையில் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில், அயலகத் தமிழர்களின் நலன் காத்திட தமிழ்நாடு அரசுடன் இணைந்து பணியாற்றி வரும் தமிழ் சங்கங்களின் பணிகளை அங்கீகரிக்கவும் ஒருங்கிணைக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ம் நாள் "அயலகத் தமிழர் தினமாக" கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக கடந்த 2022–ம் ஆண்டு பகுதியளவில் நேரடியாகவும் இணைய வழியாகவும் நடத்தப்பட்டது. மேலும் கடந்த 2023–ம் ஆண்டு சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து தமிழ் சங்கங்களின் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட அயலகத் தமிழர் தின விழா சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் எதிர்வரும் 2024, ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் தின விழா சிறப்பான முறையில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பெருவிழாவில் கலந்து கொள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ள அழைப்பிதழ் அனுப்பிட ஏதுவாக தங்களது துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளில் பயின்ற முன்னாள் மாணவர்கள் தொடர்பான விவரங்களை இத்துறைக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/– பா. கிருஷ்ணமூர்த்தி
ஆணையர்

ஆணையருக்காக